[1989 நவம்பர் 1

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நிறுவனம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(12-00)

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.